2. அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்புகள்—அவையில் எடுத்துக்கொள்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு அறிக்கைகளுக்கெல்லாம் இப்போதுதான் பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு இரண்டு, இரண்டுவீதமாக எடுக்கலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) துறைகளிடமிருந்து பதில்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. அதனால், பதில்கள் வர வர நாம் எடுக்கலாம். (குறுக்கீடுகள்) அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) என்னிடம் சொல்லுங்கள், என்ன? அமைச்சர் தயாராக இருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை.*

3. கவன ஈர்ப்பு

(அ) ஆலங்குடி தொகுதி, மின்னழுத்த ஏற்றத்தாழ்வால் விவசாயம் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். இராசசேகரன் அவர்கள். (குறுக்கீடுகள்)*

***திரு. எஸ். இராசசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் மின்னழுத்த ஏற்றத்தாழ்வால் மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைவதால் விவசாயம் பாதிப்பது" குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

2007 ஏப்ரல் 5] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அறிக்கை

புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட ஆலங்குடி தொகுதியானது பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் கொண்ட பகுதியாகும். இந்தப் பகுதியில் விவசாயத்திற்குப் போதிய நீர் வளம் இல்லாததாலும், நிலத்தடி நீர் மட்டம் சுமார் 500 அடிக்குக் கீழே சென்று விட்டபடியாலும், பெரும்பான்மையான விவசாயிகள் மிக ஆழத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, அவற்றிலிருந்து அதிகத் திறனுடைய மின் மோட்டார்மூலமாகத் தண்ணீரை வெளியேற்றி விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மின் மோட்டார்களுக்கு அதிக மின் சக்தி தேவைப்படுவதால், அப்பகுதியில் உள்ள மின்மாற்றிகள் அடிக்கடி பழுதாகும் நிலை ஏற்படுகிறது. எனவே, இக்குறையினைச் சரிசெய்திட, 2006-2007 ஆம் நிதியாண்டில் ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 66 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டும், 26 மின்மாற்றிகள் திறன் உயர்த்தப்பட்டு இயக்கி வைக்கப்பட்டும், மேலும் புதியதாக 37 மின்மாற்றிகள் அமைப்பதற்கும், 40 மின்மாற்றிகள் திறனை உயர்த்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதைத்தவிர, ஆலங்குடி தொகுதியில் மின் அழுத்தத்தை மேம்படுத்த, நெடுவாசல் கிராமத்தில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டு, மின் நிலையம் நிறுவும் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன. விரைவில் இந்த மின் நிலையத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

முற்பகல் 9-35

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கிணறுகள் ஆழமாக இருப்பதன் காரணமாக 500 அடிக்குக் கீழே சென்று தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கின்றது. அந்தத் தண்ணீரை எடுப்பதற்கு அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே, இப்படி மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால், மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைகின்றன என்று சொல்லி, அதற்கான நடவடிக்கை எடுத்து விரைவில் குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக புதியதாக 66 மின்மாற்றிகள் அமைக்கப்படும் என்றும், 26 மின்மாற்றிகள் திறன்

[திரு. எஸ். இராசசேகரன்] [2007 ஏப்ரல் 5

உயர்த்தப்பட்டு இயக்கி வைக்கப்படும் என்றும், புதியதாக 37 மின்மாற்றிகள் அமைப்பதற்கும், 40 மின்மாற்றிகள் திறனை உயர்த்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன என்றும், இன்னும் நெடுவாசல் கிராமத்தில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்பட இருக்கின்றது என்ற விவரத்தையும் சொல்லியிருக்கின்றீர்கள். இவையெல்லாம் சரிதான். இருந்தாலும், அந்தப் பகுதி மட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை அதைப்போல ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி மின்சார இடர்பாடுகள் ஏற்படுகின்றன. ஒரு மின்மாற்றி கெட்டுவிட்டால் சரி செய்வதற்கு 20 நாட்கள் ஆகின்றன. ஆகவே, 20 நாட்களுக்கு அங்கே விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதற்கு நிரந்தரத் தீர்வாக அமைச்சர் அவர்கள் மேலும் சில இடங்களில், திருவரங்குளம் போன்ற பகுதிகளில் 100 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியிலே மின்மாற்றிகள் நிறைய பொருத்தப்பட வேண்டியிருக்கின்றன. ஏற்கெனவே, நான் அவையிலே குறிப்பிட்டதைப்போல 3,000 மின்மாற்றிகளை அண்ணா பிறந்த நாளுக்குள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். உங்கள் மாவட்டத்திலே மட்டும், 200 மின்மாற்றிகள் உடனடியாக அமைத்தால்தான் அந்தப் பிரச்சினை தீரும். அதற்காக இந்த மாதத்திற்குள்ளாக 200 மின்மாற்றிகள் அமைத்து அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல நெடுவாசல் கிராமத்திலே 33/11 கே.வி. துணை மின்நிலையத்தை அமைக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இந்த ஐந்தாண்டு திட்டத்திலே 325 துணை மின் நிலையங்களை தமிழகம் முழுவதும் அமைக்க இருக்கின்றோம். அதைப் பரிசீலனை செய்து, எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS